# டாபிந்து

பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது

ஆரம்பம் 1984

மலர் 40 இதழ் 04 2024 வைகாசி மாத பதிப்பு


# சர்வதேச தொழிலாளர் தினம்
# சமவாயங்கள் உண்டு, உரிமைகள் கிடையாது!
## உரிமைகளை வென்றெடுக்கும் உழைக்கும் பெண்களின் மே தினம் 2024!



அடிப்படையில். மே தினத்தில் எட்டு மணிநேர வேலை நாளுக்கான வாழ்வூதியத்தின் திடீர் அவசியத்தை எழுப்பிய போதும், யதார்த்தத்தில் தொழிலாளர்களுக்கு எட்டு மணிநேரத்தில் தமக்கான வாழ்க்கை ஊதியத்தை உழைத்துக் கொள்ள முடியாதிருப்பதுடன், நீண்ட நேர வேலை நாட்களை இயல்பாக்கும் நோக்கில் புதிய தொழிலாளர் சட்டங்களை உருவாக்குகின்றனர். வாழ்வூதியமின்மை மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கப்படுவதன் காரணமாக, மேலதிக வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்காக தொழிற்சாலைகளில் மேன்பவர் தொழில் (Man Power), வெளிநாட்டு வேலை, பாலியல் தொழில் உட்பட முறைசாரா வேலைகளுக்காக பெண் தொழிலாளர்கள் தள்ளப்படுகின்றார்கள். சமவாயங்கள் உண்டு, உரிமைகள் கிடையாது! எனும் கருப்பொருளின் கீழ் உரிமைகளை வென்றெடுக்கும் உழைக்கும் பெண்களின் மேதினமானது 2024 மே மாதம் 01ம் திகதி பெண்கள் தலைமையிலான பேரம்பேசும் குழுவினரால் (WLBC) கொழும்பில் அமைந்துள்ள இலங்கை மன்றத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் ஐந்நூறு பங்கேற்பாளர்களைக் கொண்ட இந்த மே தினமானது, ஜவுளி மற்றும் ஆடைத் தொழிலாளர்கள் சங்கம்

2ஆம் பக்கம் பார்க்க...

## உள்ளே!


பக்கம் 03 – சமவாயங்கள் உண்டு, உரிமைகள் கிடையாது!

பக்கம் 04 - 08 – எமது பணி

பக்கம் 09 – ரனா பிளாஸா வீழ்ச்சி தொடர்பாக நினைவுகூறல்

பக்கம் 10 – எமது சிந்தனை / சிரிப்பின் கண்ணீர்க் கதை

பக்கம் 11 – கவிதை மழை

## வியர்வைத்துளி கூட்டமைப்பு

221, வெலபட வீதி, கட்டுநாயக்க.
தொ.பே: 011 4 851 383
மின்னஞ்சல்: dabindu.infoco@gmail.com
முகநூல்: dabindu collective sri lanka:


# பலவீனமான ஆட்சிமுறைமையின் கீழ் கொண்டாடப்பட்ட சர்வதேச தொழிலாளர் தினம்

இம்முறை சர்வதேச தொழிலாளர் தினமானது பலவீனமடைந்த ஆட்சிமுறையின் கீழ் கடன்சுமையினாலும், வரிச்சுமையினால் நசுக்கப்பட்டு தொழிலாளர்களின் சொற்ப சம்பளமும் வெட்டப்படுகின்ற முற்று முழுதான தோல்வியுற்றதோர் சூழ்நிலைலேயே கொண்டாடப்பட்டது. நாட்டின் திவால் நிலைமைக்கு மத்தியில் ஊழல், மோசடி, துஷ்பிரயோகங்கள் மிக்க பின்னணியில், பொருளாதார நெருக்கடிக்கோர் தீர்வாக, நாட்டின் அடிமட்ட மக்களிடமிருந்து அதனை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் மிகவும் கீழ்த்தரமான திட்டங்களால் தொழிலாளர்கள் மேலும் பாதாளத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். உரிய நேரத்தில் தேர்தலை நடத்தாதது, சர்வதேச கடன் வழங்குபவர்களுக்கு சாதகமாக பொதுச் சொத்துக்களை விற்பது, கடன் மறுசீரமைப்பு என்ற போர்வையில் தொழிலாளர்களின் சேமலாப நிதியை கொள்ளையடிப்பது, பெண் தொழிலாளர்களுக்கு வசதியளிப்பது என்ற போர்வையில் தொழிலாளர் சட்டங்களை சீர்திருத்த முயற்சிப்பது, தொழிலாளர்களை அடிமையாக்குவதற்கும் அவர்களின் உழைப்பைச் சுரண்டுவதற்கும் திட்டமிட்டுக்கொண்டிருக்கின்ற ஓர் சூழலில், வெற்றியைக் கொண்டாடும் நாளாகிய மேதினக் கொண்டாட்டமானது சவாலாகவே காணப்பட்டது. இத்தகைய பின்னணியில் தொழிலாளர்கள் ஓர் கூட்டமைப்பாக இருக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயமாக உள்ளது.

ஆண்டு ஊதிய உயர்வு, மிகையூதியம், வேலை நேரம், நலன்திட்ட உதவிகள் என்பன முறையாக வழங்கப்படாமையினால், குழந்தைகளின் கல்விக்கும், சுகாதாரத்திற்கும் மற்றும் சத்துணவுக்கும் வருமானத்தை ஒதுக்க முடியாமல் இன்றைய உழைக்கும் பெண்கள தங்களது முக்கிய உணவைக் கூட தியாகம் செய்ய வேண்டியுள்ளது. வேலைப் பாதுகாப்பற்ற சூழலில், தொழில் உரிமைகளுக்காக குரல் எழுப்பும் தொழிலாளியின் உரிமை நசுக்கப்பட்டுள்ளது. அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிலாளர் சட்டங்கள் உழைக்கும் வர்க்கத்தினரின் வேலைகளை முறைசாரா துறைக்குள் தள்ளுவதாக உள்ளது. தொழில்சாலைகள் மூடப்படுதல், தொழிலாளர் சட்டங்கள் தொடர்பில் தீர்மானமெடுக்கும் அதிகாரத்தை முதலாளிக்கே வழங்கும் தொழிலாளர்களை அடிமைப்படுத்தும் சட்டங்களைத் திரும்பப் பெறுவதற்கு வற்புறுத்துகின்ற தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுவதன் ஊடாக அடக்குமுறை ஆட்சியாளர்களுக்கு நமது வலிமையைக் காட்டி எதிர்ப்புத் தெரிவிக்கப்படல் வேண்டும். அத்தகையதோர் நியாயமான குரலை எழுப்புவதற்கு உழைக்கும் வர்க்கத்தின் சக்தியைக் காட்ட அனைவரும் ஒன்றுபட வேண்டும். கைகோர்க்க வேண்டும்.

1ஆம் பக்கத் சர்வதேச தொழிலாளர் தினம்...

(TGCWU), வணிக மற்றும் தொழில்துறை சேவைகள் சங்கம் (CIWU), டாபிந்து கூட்டு ஒன்றியம், RED ஒன்றியம், பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் (VOPP) மற்றும் ஸ்டான்ட் அப் மூவ்மன்ட் லங்கா (SUML) அங்கத்தவர்கள் மற்றும் உழைக்கும் பெண்களின் கொண்டாட்டமாக காணப்பட்டது. டாபிந்து கூட்டு ஒன்றியத்தின் சமிளா துஷாரி, CIWU அமைப்பின் சுவஸ்திகா அருலிங்கம், RED அமைப்பின் சந்திரா தேவநாராயன, VOPPஇன் லவீனா ஹசந்தி, SUML இன் அஷிலா தன்தெனிய மற்றும் TGCWU வின் லலிதா தேதுவகுமார போன்றோர் தொழிற்சங்கங்களின் தலைவர்கள் / பிரதிநிதிகள் என்ற வகையில், ஆற்றிய உரை இந்நிகழ்வை மேலும் வண்ணமயமாக்கியது.

இங்கு டாபிந்து கூட்டு ஒன்றியத்தின் சமிளா துஷாரி கூறியவாறு, நாம் பெரும்பாலானோர் பெண்களாக இருந்தாலும், நாம் வீட்டைப் பார்த்துக் கொண்டு, பிள்ளைகளை கவனித்து, நோயாளர்களை பார்த்துக் கொண்டு, ஏனைய வேலைகளுடன் இதையும் ஒன்றாக இணைத்து பணிபுரிவது பெண்களாவர்!... இவ்வாறு சவால்கரமான சூழ்நிலையில் இருந்து தான் நாம் சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடுகின்றோம். இந்த நாட்டிற்கு டொலர் வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதற்கான எந்தவெதரு வழியும் இல்லாத சந்தர்ப்பத்தின்போது, இந்த நாட்டிற்கு டொலரை உற்பத்தி செய்யும் ஓர் பொருளாதாரத்தை ஏற்பாடு செய்யாது, பெண்களை அடிமைகளாக்கி, அப்பெண்களின் உழைப்பை மேலும் சுரண்டி, அவர்களை இவ்வாறு இழிவாக கவனிக்கின்றார்கள். இந்த சவால்கரமான நேரத்தில் பெண்களின் ஒன்றுகூடல் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது.

உழைக்கும் பெண்களின் மேதினக் கொண்டாட்டத்தின் பின்னர், கொழும்பு 02, ஸ்டான்லி மைதானத்தில் இடம்பெற்ற “ஒன்றிணைவோம்” தொழிற்சங்க அமைப்பினால் ஒழுங்குசெய்யப்பட்ட மேதினத்திற்கு WLBC இணைந்து கொண்டது.






# சமவாயங்கள் உண்டு, உரிமைகள் கிடையாது!

## பெண்கள் தலைமையிலான பேரம் பேசும் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டது.

# மேதின அறிக்கை

பெண்கள் தலைமையிலான பேரம் பேசும் குழு (WLBC) என்பது பெண்கள் தலைமையிலான தொழிற்சங்கங்களின் கூட்டணியாகும், இது பெண்களின் கூட்டு பேரம் பேசும் சக்தியை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தொழிலாளர் கொள்கைகள் விவாதிக்கப்படுகின்ற தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழுவில் பெண்கள் பிரதிநிதித்துவம் இல்லை. ஆடைத் தொழிலாளர்களின் ஊதிய வாரியங்களில் பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. தொழிற்சங்கத்தில் தலைமை பொறுப்பை வகிப்பதும் ஆண்களே ஆவர். உரிமையாளர்ச் சங்கங்களும் அவ்வாறுதான். சட்டமன்றத்தில் ஆண்களின் ஆதிக்கமே மேலோங்கி உள்ளது. வெளிப்படையாகவே, ஆண்கள் பெண்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கிறார்கள். தேசிய அளவில் அர்த்தமுள்ள கூட்டு பேரம் பேசும் செயல்முறைகளில் பெண்களை நேரடியாக ஈடுபடுத்துவதற்காக WLBC நிறுவப்பட்டது. மேலும், ஆடைத் தொழில் துறையானது Global Value Chains இன் ஒரு பகுதியாக இருப்பதால், சர்வதேச வர்த்தக நிறுவனங்களுடன் பேரம் பேசுவதற்கும், சர்வதேச தொழிலாளர் அமைப்பு, சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் பிற சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகொள்வதற்கும் பெண் தொழிலாளர்களுக்கு அதிகாரம் அளிக்கும் நோக்கத்துடன் WLBC நிறுவப்பட்டது.

WLBC இன் உறுப்பினர்களாக ஜவுளி மற்றும் ஆடைத் தொழிலாளர்கள் சங்கம் (TGCWU), வணிக மற்றும் தொழில்துறை சேவைகள் சங்கம் (CIWU), டாபிந்து கூட்டு ஒன்றியம், சுநுனு ஒன்றியம், பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் (VOPP) மற்றும் ஸ்டான்ட் அப் மூவ்மன்ட் லங்கா (SUML) போன்ற அமைப்புக்கள் காணப்படுகின்றன. WLBC இன் உறுப்பு நிறுவனங்கள் சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் ஆடைத் தொழிற்சாலைகளுடன் பணிபுரிந்த நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளன. சிதறிச்சென்ற செயற்பாடுகள் நமது பேரம் பேசும் சக்தியை பலவீனப்படுத்துகிறது என்பதையும், கூட்டாக பேரம் பேசுவதற்கு ஒன்றிணைவதன் மூலம் பெண்கள் தலைமையிலான தொழிற்சங்கங்கள் என்ற எமது நிலைத்து நிற்கும் நிலையை வலுப்படுத்துவதன் தேவை உணரப்பட்டதனாலும் ஒரு கூட்டு இயக்கமாக முன்னோக்கிச் செல்ல தீர்மானம் எட்டப்பட்டது.

அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதம் அளிக்கப்பட்ட தொழிற்சங்க சுதந்திரத்தை நேரடியாக மீறுவதன் மூலம் தொழிற்சங்க தொழிலாளர்களை தொந்தரவுசெய்தல், பாகுபாடு மற்றும் தொழிற்சங்க ஊழியர்களை தாக்குதல் மற்றும் பணிநீக்கம் செய்வதன் மூலம் தொழிற்சங்கங்களுக்கு இடையூறு விளைவித்தலானது தொடர்ந்து அதிகரித்துகொண்டு வருகிறது. தொழிற்சங்க உரிமைகளைப் பாதுகாக்கும்

4ஆம் பக்கம் பார்க்க...



3ஆம் பக்கத் **சசமவாயங்கள் உண்டு...**

சட்டங்கள் இருந்தும், இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக, சைபர் பாதுகாப்புச் சட்டம் (இணையவழிமூல பாதுகாப்பு), பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்றவற்றின் மூலமாகவும், முன்மொழியப்பட்ட தொழிலாளர் சட்டங்கள் மூலமாகவும் நாம் அரசிடமிருந்தே அடக்குமுறையை அனுபவித்து வருகின்றோம்.

பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான துன்புறுத்தல் மற்றும் வன்முறை ஆகியவை பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு ஆடைத் தொழிற்சாலையிலும் அதனைச் சுற்றியும் காணப்படுகின்ற பிரச்சனைகளாகும். இந்த வன்முறை பணியிடத்திற்கு அப்பால் விரிவடைந்துள்ளதுடன், வேலைக்கு செல்லும் வழியில் மற்றும் தங்கும் விடுதிகளில் எதிர்கொள்ளப்பட்டு வருகிறது.


வீட்டில் மேற்கொள்ளப்படும் ஊதியம் இல்லாத பராமரிப்பு பணியானது, பெண்கள் மீது சமமற்ற பொறுப்பை சாட்டுவதுடன், அவர்களை ஆபத்தான மற்றும் முறைசாரா வேலைகளுக்கும் தள்ளுகிறது. நெகிழ்வான பணியை ஊக்குவிக்கும் முன்மொழியப்பட்ட தொழிலாளர் சட்டங்கள் பெண்களின் நேரத்தையும் உழைப்பையும் மேலும் சுரண்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளதேயொழிய, பெண்களின் சுமைகளைக் குறைக்கவில்லை என்பதே உண்மை.

இந்த மே தினத்தில் பாலினம், இனம், சாதி எனும் அனைத்து அடையாளங்களால் நம்மிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக ஒன்றுபடுவோம். உழைக்கும் பெண்களைக் கைவிட்ட உலகளாவிய ஆட்சி மற்றும் புதிய தாராளவாத அரசுக்கு எதிராகப் போராடத் தீர்மானித்து, பின்வருவனவற்றைக் கோருகிறோம்.

1. 8 மணி நேர வேலை நாளுக்கு ஏற்றதொரு வாழ்க்கை ஊதியம் பெற்றுக் கொள்வதற்கு,
2. சுரண்டல் மற்றும் அடிமைத்தனத்தை அனுமதிக்கும் தொழிலாளர் சட்டங்களை இரத்து செய்வதற்கு,
3. ஆடைத் தொழிலாளர்களின் உழைப்புச் சுரண்டல் தொடர்பாக சர்வதேச வர்த்தக நாமங்கள் (பிராண்டு) பொறுப்பேற்க கோருதல்.
4. பெண்களின் சங்கம், பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம் பேசும் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாத்தல்,
5. பணியிடத்திலும் வெளியிலும் பாலியல் துன்புறுத்தல் மற்றும் வன்முறையை நிறுத்துவது,
6. தொழிற்சாலைகளிலும் பணியிடங்களிலும் பகல்நேர பராமரிப்பு மையங்கள், நீண்டகால ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு மற்றும் தந்தை மகப்பேறு விடுப்பு போன்ற தொழிற்சாலைகள் மற்றும் பணியிடங்களில் பெண்களுக்கான ஆதரவுமிக்க கட்டமைப்புகளை ஏற்படுத்தவும்,
7. 24 மணி நேர மகளிர் காவல் பணியகத்தை நிறுவுதல், பெண் தொழிலாளர்களுக்கான குடும்ப நல சுகாதார சேவைகளை பெற்றுக்கொள்ளல், அரசாங்கத்தால் பராமரிக்கப்படும் பாதுகாப்பு இல்லங்கள், மற்றும் மருத்துவ நிலையங்கள் மூலம் பெண்கள் மற்றும் LGBTQ+ சமூகத்தினருக்கு சிறந்த பாதுகாப்பை பெற்றுக்கொடுக்கவும்,
8. சானிட்டரி நாப்கின்கள் மீதான வரிகளை ரத்து செய்து, மானிய விலையில் சானிட்டரி நாப்கின்களைப் பெற்றுத் தரவும்,
9. மக்கள் அங்கீகாரம் இல்லாத அரசாங்கத்தின் பின்னணியில் ஒழிந்திருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் மட்டுப்படுத்தல் திட்டம், வெட் வரி மற்றும் மின்சாரம், எரிவாயு விலை வரி உயர்வுகள் மற்றும் அரசின் பொது நிறுவனங்களின் விற்பனையை உடனடியாக நிறுத்துவதற்கும்,

8ஆம் பக்கம் பார்க்க...

# உயிர்த்த ஞாயிறு குண்டுதாக்குதல் நினைவஞ்சலி




2019ம் ஆண்டில் உயிர்த்த ஞாயிறு தினமான சித்திரை மாதம் 21ம் திகதியன்று, நீர்கொழும்பு, மட்டக்களப்பு மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் அமையப்பெற்றுள்ள மூன்று தேவாலயங்கள் மற்றும் கொழும்பில் அமைந்துள்ள மூன்று சொகுசு விடுதிகள் என்பன வெளிநாட்டு பயங்கரவாதிகளுக்கு விசுவாசமானதாக அறிவிக்கப்பட்ட உள்ளூர் தீவிரவாத அமைப்பினால் உருவாக்கப்பட்ட திட்டமிடப்பட்ட தற்கொலை குண்டுவெடிப்புத் தாக்குதலுக்கு உட்பட்டது. இந்த கடும் தாக்குதலினால் வெளிநாட்டவர்கள் உட்பட உள்நாட்டவர்கள் 250இற்கும் அதிகமானோர் உயிரிழந்ததுடன், 500இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ் இனப்படுகொலைக்கு இன்றுடன் ஐந்து வருடங்களாவதுடன், இதன்மூலம் பாதிக்கப்பட்டோருக்கு சட்டரீதியாகவோ அல்லது வேறு வகையிலான எந்தவொரு ஆதார உதவிகளும் இதுவரை கிடைக்கப்படவில்லை. இதற்காக நினைவுகூரும் நிகழ்வொன்று நீர்கொழும்பு சிவில் சமூக அமைப்புக்களினால் கடந்த சித்திரை மாதம் 21ம் திகதி நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய சந்தியில் இடம்பெற்றது.

# குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான உணர்திறன் பட்டறைகள்

டாபிந்து கூட்டமைப்பினால் குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் ஐம்பது பேருக்காக இரு உணர்திறன் பட்டறைகள் நடத்தப்பட்டன. 2024ம் ஆண்டு சித்திரை மாதம் 26ம் திகதி சீதுவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து கட்டுநாயக்கவில் நடாத்தியதுடன் வைகாசி மாதம் 12ம் திகதி கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும் நடைபெற்ற இந்த உணர்திறன் பட்டறைகளின் நோக்கமாக, இலங்கை இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பிற உற்பத்திப் பகுதிகளில் (கிளிநொச்சி மற்றும் வவுனியா) உள்ள பெண் தொழிலாளர்கள் மற்றும் LGBTIQA+ சமூகத்தினர் முகங்கொடுக்கும் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார உரிமைகள் மீறப்படுதல் மற்றும் ஆண்- பெண் பாலின அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகள் தொடர்பாக மருத்துவ தாதியர்களை அறிவுறுத்துதல், ஒதுக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார உரிமை மீறல்களுக்கு எதிராக செயற்பாட்டுடன் கூடிய முன்கூட்டிய பதிலளிப்புக்களுக்கு குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களை ஊக்கப்படுத்தல் மற்றும் இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் ஏனைய உற்பத்திப் பிரிவுகளில் பெண் தொழிலாளர்கள் மற்றும் LGBTIQA+ சமூகத்தினருக்கு விரிவான சேவைகளுக்காக அணுகுமுறைகளை அதிகரித்தல் என்பன காணப்பட்டது. இதில் குறிப்பாக சேவை வழங்குநர்கள் மற்றும் பெண் தொழிலாளர்கள் மற்றும் LGBTIQA+ சமூகத்தினர் மத்தியில் தொழில்வாண்மை ரீதியான தொடர்புகள் மேற்கொள்வதை ஊக்கப்படுத்துவதாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து டாபிந்து கூட்டமைப்பின் நிர்வாக இயக்குனரான சமிளா துஷாரி அவர்களினால் இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பிற உற்பத்திப் பகுதிகளில் (கிளிநொச்சி மற்றும் வவுனியா) உள்ள பெண் தொழிலாளர்கள் மற்றும் LGBTIQA+ சமூகத்தினர் முகங்கொடுக்கும் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார உரிமைகளைப் பாதுகாக்கும் பயிற்சி இடம்பெற்றதுடன், சேவை வழங்குநர்கள் மற்றும் பெண் தொழிலாளர்கள் மற்றும் LGBTIQA+ சமூகத்தினர் மத்தியில் தொடர்புகளை கட்டியெழுப்பக்கூடிய முறைகள் பற்றிய கலந்துரையாடல் இடம்பெற்றது. சமூகத்திற்கு கிடைக்கும் சுகாதார சேவை கொடுப்பதில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்தல் இந்த செயற்றிட்டத்தின் தனித்துவமான விடயமொன்றாகும்.

# ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களின் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார உரிமைகள் தொடர்பாக விழிப்பூட்டல் செயற்றிட்டம்



ஆடைத் தொழிற்சாலையில் பெண் தொழிலாளர்களின் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பாக அறிவுறுத்தும் செயற்றிட்டமொன்று கடந்த மே மாதம் 12ம் திகதி கட்டுநாயக்க ஃபுல் மூன் ஹோட்டல் வளாகத்தில் இடம்பெற்றது. டாபிந்து கூட்டமைப்பின் பூரண அனுசரனையுடன் கீழ் சீதுவ பொது சுகாதார அதிகாரிகள் காரியாலயத்தின் பிரதான வைத்தியர் ரவி சில்வா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இச்செயற்றிட்டத்தில் சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில்புரியும் 21 பெண் தொழிலாளர்கள் பங்கேற்றதுடன், பொது சுகாதார அலுவலகம் மற்றும் ஆடைத் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் இடையே உறவை மேம்படுத்துதல் இதன் அடிப்படை நோக்கமாகும்.

அங்கு இவர்களின் பணியிடத்திலும், தொழில்முறை பிரச்சினைகள் தொடர்பில் மற்றும் தங்கும் விடுதிகளில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி குழு செயற்பாடுகள் மூலம் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டது.

சீதுவ பொது சுகாதார அதிகாரிகள் காரியாலயத்தின் பிரதான வைத்தியர் ரவி சில்வா அவர்களினால் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பாக பெண்களை விழிப்புணர்வூட்டும் நோக்கில் சுகாதாரம், ஊட்டச்சத்து, தொற்றும் நோய்கள், தொற்றா நோய்கள் குடும்பக் கட்டுப்பாடு மற்றும் பெண் வன்முறை தொடர்பில் போதிய விளக்கம் வழங்கப்பட்டது.

மேலும், கருக்கலைப்பு மற்றும் இனப்பெருக்க தொகுதி தொடர்பாகவும் அதில் ஏற்படக்கூடிய புற்றுநோய் நிலைமைகள் குறித்தும், இவ்வாறான சூழ்நிலைமைகளின் போது பின்பற்றவேண்டிய விடயங்கள் தொடர்பிலும் மிக அர்த்தமுள்ள விரிவுரையொன்று வைத்தியரினால் நடத்தப்பட்டது.

அத்தோடு, சீதுவ பொது சுகாதார அலுவலகத்தினூடாக வழங்கப்படும் சேவைகளாக, திருமணத்திற்கு முன் இளைஞர்களுக்கு வழங்கப்படும் ஆலோசனை கிளினிக்குகள், கர்ப்பிணிப் பெண்களின் குழந்தைப் பிரசவத்தின் பின்னர் அவர்களுக்காக நடத்தப்படும் கிளினிக்குகள் மற்றும் குடும்பக்கட்டுப்பாட்டு பரிசோதனைகள், உளநல ஆலோசனை கிளினிக்குகள், கர்ப்பப்பை பரிசோதனை, பல்மருத்துவ பரிசோதனைகள் போன்றவை இடம்பெறுவதாகவும் மற்றும் இப்பரிசோதனைகள் நடத்தப்படும் தினங்கள் மற்றும் நேரங்கள் தொடர்பிலும் வைத்தியரினால் வருகைதந்த பங்பேற்பாளர்களுக்கு அறிறுவுத்தப்பட்டது.

# உளவளத்துணை செயற்றிட்டம்





உளநலமென்பது, எந்தவொரு மனிதரின் நல்வாழ்விற்கு அவசியாமான அடிப்படை காரணியாகும். விசேடமாக பல்வேறு சிரமங்களின் கீழ் ஆடைத் தொழிற்சாலைகளில் தொழில்புரியும் பெண்களின் உளநல ஆரோக்கியம் தொடர்பாக உணர்திறன் மிக்க ரீதியில் முன்னிற்றல் என்பது டாபிந்துவாகிய எமது முதன்மை மதிப்பீடுகளுள் ஒன்றாகும். தனி மற்றும் குழு ரீதியில் இடம்பெற்ற இவ் உளவளத்துணை செயற்றிட்டம் கடந்த மார்ச் மாதம் 03ம் திகதி கிளிநொச்சி மற்றும் வவுனியாவில் இடம்பெற்றன. இச் செயற்றிட்டத்திற்கு உளவளத்துணையாளர் அன்டன் புனிதன் மற்றும் பிரியா ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு தமது ஒத்துழைப்பை வழங்கினர்.

# பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி திட்டம்



டாபிந்து கூட்டமைப்பினால் முதன்முறையாக வடக்கில் தொழில்புரியும் தொழிலாளத் தலைவர்களை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி திட்டமானது, இம்முறையும் ஏப்ரல் மாதம் 27, 28 ஆகிய இரு தினங்களில் வவுனியாவில் இடம்பெற்றது. 2018ம் ஆண்டில் இடம்பெற்ற செயற்றிட்டங்களின் ஓர் தொடர்ச்சியாக, இம்முறையும் இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தொழிலாளர்களை விழிப்புணர்வுபடுத்தி, தொழிலாளர்ப் பிரச்சினைகளின் போது இதற்காக முன்னிற்கக்கூடிய தலைமைத்துவம் கொண்டோரை அவர்கள் மத்தியில் இருந்து தெரிவுசெய்து, அவர்களை தலைவர்களாக கட்டியெழுப்புதல் இச்செயற்றிட்டத்தின் குறிக்கோளாகும். இங்கு வளவாளர்களாக நியந்தினி கதிர்காமர் கலந்து கொண்டதுடன், இச்செயற்றிட்டமானது, வவுனியாவில் உள்ள ஓவியா ஹோட்டல் வளாகத்தில் இடம்பெற்றது.



# பொது சமையலறை

நாட்டில் நிலவும் தற்கால பொருளாதார நெருக்கடியின் மத்தியில் போசணைமிக்கதான உணவுவேளையொன்றை பெற்றுக்கொள்வதென்பது பெரும்பாலானோருக்கு பாரிய பிரச்சினையாக உள்ளது. ஆடைத் தொழிற்சாலை பெண் தொழிலாளர்களுக்கு தமது நிறுவனங்களினால் பெற்றுக் கொடுக்கப்படும் உணவானது, எந்தவொரு வகையிலும் போசணைமிக்க வகையில் தயாரிக்கப்படுவதில்லை. இவ்வாறு குறைந்தளவு போசணை நிலைமையின் கீழ் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு ஒத்தாசை வழங்கும் நோக்கில் டாபிந்து கூட்டமைப்பினால் நாம் பொது சமையலறை எனும் செயற்றிட்டத்தினை ஆரம்பித்தோம். இதனூடாக பெண் தொழிலாளர்களுக்கு அவர்களின் பங்களிப்புடன் சுகாதார மற்றும் போசணை மிக்கதான உணவை உண்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது. இம்முறை டாபிந்து பொது சமையலறையானது கடந்த பங்குனி மாதம் 31ம் திகதி வவுனியாவில் வெற்றிகரமாக இடம்பெற்றது.



4ஆம் பக்கத் **சசமவாயங்கள் உண்டு...**



10. வெளிநாட்டுக் கடன் சுமையை உழைக்கும் மக்கள் மீது சுமத்துவதனை நிறுத்தி சர்வதேச இறையாண்மைப் பத்திரதாரர்களிடமிருந்து கடன் விலக்கை பெற்றுக்கொள்ளவும்
11. ஊழியர் சேமலாப நிதியின் வட்டி விலக்குகளை மற்றும் வரி அரவிடுதலை நிறுத்தவும்,
12. அத்தியாவசியமான மானியம் மற்றும் இலவச மருத்துவம் மற்றும் கல்வி முறையின் வளங்களை அதிகரிக்கவும்,
13. தோட்டத் தொழிலாளர்களுக்கு நிலம், வீடு, கல்வி மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்தவும்,
14. சிறு விவசாயிகள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதார இறையாண்மையைப் பாதுகாக்கவும்,

நாங்கள் வலியுறுத்துகிறோம்.

WLBC என்ற வகையில், பெண்களின் உழைப்பு முறையான பணியிடங்கள், தொழிற்சாலைகள், தோட்டங்கள், விவசாய நிலங்கள் மற்றும் கடல் கடந்து செல்கின்றது என்பதை மீண்டும் வலியுறுத்துவதற்காக சர்வதேச தொழிலாளர் தினத்தை உழைக்கும் பெண்களின் மே தினமாக கொண்டாட முடிவு செய்தோம். இது குடும்பங்கள் மற்றும் முறைசாரா துறைகளுக்குள் அங்கீகரிக்கப்படாத, குறைத்து மதிப்பிடப்பட்ட மற்றும் பெரும்பாலும் ஒதுக்கப்பட்ட தொழிலாளர்கள் என்பது வரை விரிவடைகிறது. சர்வதேச தொழிலாளர் தினத்தை நாம் கொண்டாடும் வேளையில், ஊதியமில்லாத பராமரிப்புப் பணியில் ஈடுபடுவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை நிலைநிறுத்தப் பங்களிக்கும் பெண்களின் உழைப்பின் பன்முகத் தன்மையைக் கொண்டாடுகிறோம்.

**உழைக்கும் பெண்களுக்கு வெற்றி!**



# ரனா பிளாஸா கட்டடத்தொகுதி இடிந்து வீழ்தலை நினைவுகூறல்

கடந்த பதினொறு ஆண்டுகளுக்கு முன், பங்களாதேஷில் ரனா பிளாஸா எனும் பெயர் கொண்ட கட்டிடத்தின் வீழ்ச்சியின் காரணமாக சுமார் ஆயிரத்து நூற்று முப்பத்து எட்டு பேர் உயிரிழந்தமையை நாம் நினைவுகூருகின்றோம். இந்த பேரழிவில் தமது வாழ்வை பறிகொடுத்தவர்கள் மற்றும் அதன்மூலம் பாதிப்புக்குள்ளானவர்களுக்காக நாம் முன்னிற்க வேண்டும். தொழிலாளர்களின் வாழ்வானது ஓர் வியாபாரப் பொருளல்ல என்பதும், அதை சுலபமான விடயமாக கருதி தூக்கி எறிந்தவிடக்கூடிய விடயமல்ல என்பதனை தெரியப்படுத்துவதற்கு நாம் ஆடைத் தொழிற்சங்கத்துடன் ஒன்றுசேரந்து போராடுகின்றோம்.

ரனா பிளாஸா பேரழிவானது, மனிதனால் ஏற்படுத்தப்பட்ட மற்றும் இது தடுத்துக்கொள்ளக்கூடியதோர் பேரழிவாகக் காணப்பட்டதுடன், பாதுகாப்பற்ற தொழிற்சாலைகள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நிறுவனங்கள் தவறியமையினாலும், நிறுவனக் கட்டுப்பாட்டு அதிகாரசபைகளின் கவனயீனம் மற்றும் பேராசையின் காரணமாக இப்பேரழிவு ஏற்பட்டதுடன், தொழிலாளர்கள் இன்னும் ஆதரவற்ற நிலைமையிலும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றனர். ஊதியம் வழங்காமை மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளை ஒடுக்குதல் தொடர்பாக தொழிலாளர்த் தலைவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம். 2013ம் ஆண்டிலிருந்து மூன்றாவது தடைவையாகவும் அவர்களால் பேரழிவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். தொழிலாளர்கள் பதினொரு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அதே நிலைமையை விட்டு சிறிதும் முன்னேற்றம் அடையவில்லை என்பதையும், ராணா பிளாசா சரிவிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் பலவற்றை இலகுவில் மறந்துவிட்டார்கள் என்பதையும், இது பற்றி மக்கள் விரைவில் மறந்துவிட்டனர் என்பதையும் நாங்கள் அவதானிக்கிறோம். இந்த அடக்குமுறையை எதிர்த்துப் போராடும் அனைத்து தொழிலாளர்கள் மற்றும் அவர்களது தொழிற்சங்கங்களுடன் நாங்கள் ஒன்றினைந்து நிற்கிறோம். இந்த அமைப்பில் பணம் சம்பாதிக்கும் அனைத்து பங்குதாரர்களும் இந்த நிலைக்கு பொறுப்புகூறுவார்கள். இம் முறையை புறக்கணித்து வருமானம் ஈட்டும் அனைத்து தரப்பினரும் இந்நிலைக்கு பொறுப்புதாரிகளாவர்

இந்த நாளில், ஆடை விநியோகச் சங்கிலியில் உள்ள அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் தொடர்புடைய தொழில்களைப் பாதுகாக்க தொடர்ந்து போராடுவோம் என்று உறுதியளிக்கிறோம், இத் தொழிற்சாலைகளில் உள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறந்தமுறையில் செயல்படும் வேலைவாய்ப்பு மாத்திரமன்றி அனர்த்தத்திற்கு உட்படுபவர்களுக்கான காப்பீட்டுத்திட்டத்திடம் உள்ளடக்கியதாகவும் அனைத்து தொழிலாளர்களும் ஒரு வாழ்வூதியத்தை பெற்றுத்தரக்கூடிய மற்றும் தொழிற்சங்கங்களில் ஒழுங்கமைக்கப்படக்கூடியவாறான அனைத்து வகையான தொழிலாளர் உரிமைகளுக்காகவும் நாங்கள் முன்நிற்கிறோம்.

# எமது சிந்தனை

இந்த கொன்றை மரத்தடியில் ஒருநாள், மழையில் ஒதுங்கிக் கொண்டிருந்தோம் என்றபடி, அறைக்குள் நுழைந்தாள் யசோமா. சும்மா துள்ளிக்குதித்துக் கொண்டு, இந்த கொன்றை மரத்தடியில் என்ன பண்ணுகின்றார்களோ தெரியாது. இன்று மே முதலாம் திகதி. இன்று எமக்கான தினம் என்பதுகூட ஞாபகமில்லை போலும். நன்றாக உடுத்திக் கொண்டு போனால் உணவுப் பொதியொன்றாவது கிடைக்கும். அறைக்குள்ளேயே இருந்தால் அவ்வளவுதான். அங்கு போயிருந்தாலாவது உடம்பு சோர்வு போக, பப்பரே வாத்தியத்திற்கு நடனமாடியிருந்திருக்கலாம். ஐயோ பெண்ணே! மேதினம் என்றால் அதுதான். மே முதலாம் திகதியென்பது தொழிலாளர் தினத்தைக் குறிக்கின்றது. எட்டுமணிநேர வேலையைக் கோரி மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டத்தில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த தொழிலாளர்களை நினைவுகூரும் தினம் இதுவாகும். அரிவாள் மற்றும் சுத்தியலுடனான கொடியேந்திக் கொண்டு, ஓர் அணிவகுப்பின்றி, கப்பல் கடலில் மூழ்கினாலும் நமக்கு என்ன? என்று செல்கின்றது தற்கால சமூகம். எமது அப்பா கூறுவார், அவர்களின் காலத்தில் அவர்கள் மருத்துவர்கள், ஆசிரியர்கள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோரின உரிமைகளுக்காக அணிவகுப்பு செல்வார்களாம். ஆனால் இந்த காலத்தில் ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டிக் கொண்டும், விமர்சனம் செய்துகொண்டும் தமது அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டும் இருக்கின்றார்களே தவிர, இழந்துகொண்டு செல்லும் தொழிலாளர் உரிமைகளை பாதுகாப்பதற்கான இடமொன்றினை காணமுடியாததாக உள்ளது.

இலட்சக்கணக்கான பணியாளர்கள் தனியார் துறையில் பணிபுரிகின்றார்கள். மனித உழைப்பு சுரண்டலுக்குள்ளான பல இளைஞர்கள் மீது பொறுப்புக்கூற வேண்டியவர்கள் அவர்கள் மீது கவனம் செலுத்தவில்லை. நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பெரும்பாலான இளைஞர்கள் நாட்டை விட்டு செல்கின்ற நிலைமையை நாம் காணக்கூடியதாக உள்ளது. எமது தொழிலும் உறுதியற்றதன்மையைக் கொண்டு காணப்படுகின்றது. எந்த நேரத்தில் தொழிற்சாலை மூடப்படுமோ எனும் கேள்விக்குறியோடு நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோம். தற்போதளவில் வர்த்தக வலயத்தில் உள்ள அதிகளவான தொழிலாளர்கள் நாட்டை விட்டு வெளிநாட்டை நோக்கி சென்றுள்ளனர். உயிரற்ற உடல்களுடன் கிராமங்களை நோக்கி சென்றாலொழிய, இதற்கு நாம் வேறு என்ன செய்ய முடியும்?

சமந்தினி

# சிரிப்பின் கண்ணீர் கதை

சுதந்திரத்திற்குப் பின் வரலாற்றில் ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. உயர் பணவீக்கம், நாணய பெறுமானத் தேய்வு, வேலையின்மை மற்றும் கடன் சுமை போன்றவை நாடு முழுவதும் உள்ள குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கான காரணிகளாகும். ஒதுக்கப்பட்ட சமூகங்கள் மீது மேலதிக சுமையை சுமத்தி, வறுமையால் வாடும் சமூகங்கள் மீதுள்ள சமத்துவமின்மையை அதிகரிக்கிறது.

உண்மையில், இந்த பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்படுவது யார்? வேறு யாருமில்லை. எமது ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் வாழும் தினசரி ஊதியம் பெறுவோர், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், நகர்ப்புறம் உழைக்கும் ஏழைகள் உட்பட வாழ்வாதார ஊதியத்தில் வாழும் வறியவர்களான எமது சிரிப்பின் கண்ணீரின் கதை.

அச் சூழ்நிலையின் காரணமாக, முன்னைய காலத்தில் வண்ணங்கள் மற்றும் அன்பான புன்னகைகள் நிறைந்த இலங்கையின் பரபரப்பான தெருக்களில், இப்போது பொருளாதாரம் எனும் நிச்சயமற்ற ஒரு நிழல் விழுந்திருப்பது, கண்ணுக்குப் புலப்படாத புன்னகையின் சிறு சாயலின்றி ஆகும்.

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியின் கடுமையான யதார்த்தத்தால் மூழ்கி,

குடும்பத்தில் மகிழ்ச்சி புன்னகை என்பன உறங்கியிருந்த பாய்க்குக்கூட சொல்லாமல் கதவு வழியே தெறித்தோடுகின்றன.

இலங்கை சமூகத்தில் குடும்ப அன்பு, அரவணைப்பு, ஆதரவு, ஒத்துழைப்பு, தாக்குப்பிடித்தல் போன்ற காரணிகளால் மக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளனர். ஆனால் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையினால் இது நொறுக்கப்பட்டு, வருமானம் குறைவடைந்து, உயர்ந்த பணவீக்கத்துடன் நிச்சயமற்ற எதிர்காலத்தை எதிர்நோக்கி குடும்பங்கள் போராடுகின்றன.

ரஷ்மி வீரக்குட்டி

# கவிதை மழை
# நீ என்னை சுமந்தவள்

மூன்றெழுத்து கவிதையாய் என்
அம்மா
நீ என்னை பத்து மாதம் சுமந்தாய்
எனக்கு பேச்சும் மூச்சும் நீ
அளித்தாய்
எனக்காக உன்னை அர்ப்பணித்தாய்

என் இரத்தத்தை பாலாக்கி
எனக்கு உயிர் கொடுத்தாய்
நான் அழும்போது – என்னை
கைவிடாது உன் கைக்குள் என்னை
காத்தாய்

என் கண்ணீரை துடைத்தாய்
பண்பாய் என்னை வளர்த்தாய்
பாசத்தை நிதம் பொழிந்தாய்
நான் விழும்போது என்னை
ஊக்குவித்தாய்

யாழரசி



# அம்மா உனக்காகத் தான் கவிதை எழுத நினைக்கின்றேன்

நீயே ஒரு கவிதை என்று தெரியாமல்
என்னை கருவில் சுமந்தது
மட்டுமல்லாமல்
என்னையும் ஒரு ஜீவனாக - இந்த
மண்ணுக்கு என்னை
அறிமுகப்படுத்தினாய் அம்மா!

உனக்கு வலியைத் தந்து
பிறந்ததனால் - என்னமோ
எனக்கு தெரியவில்லை – வாழ்க்கை
எனக்கு வலியை தரும் போதெல்லாம்
உன்னிடம் அடைக்கலம்
தேடுகின்றேன்!

உமது பாதங்களில் கடைசிவரை –
நான்
விழுந்து கிடப்பேன் உன் காலடி
மண்ணாக
உன் தாலாட்டில் வளர்ந்து இன்னும்
உன் தாய்மடிக்காக ஏங்கித்
தவிக்கின்றேன்.

பிரியந்தினி




# எச்சரிக்கை!!!

## உங்களது நிறுவனங்களால் வழங்கப்படும் மருந்துகள் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில்புரியம் பெண்களுக்கு வழங்கப்படும் பல்வேறு மருந்துகள் தொடர்பாக நாம் அறிந்திருக்க வேண்டும். நிறுவனத்தினூடாக தொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்படும் இந்த மருந்துகள் தொடர்பான எந்தவொரு சரியான கட்டுப்பாடுகளும் இல்லாதிருப்பது கடும் பிரச்சினையாகும். கட்டுநாயக்க மற்றும் பியகம ஆடைத் தொழிற்சாலை பிரிவுகளில் மற்றும் அதனைத்தவிர்ந்து, வடக்கில் இயங்கிவரும் தொழிற்சாலைகளிலும் இந்நிலைமையினை காணக்கூடியதாக இருப்பதுடன், பெண் தொழிலாளர்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்ற மன அழுத்தங்களின் போது அவர்களுக்கு வைத்தியரின் ஆலோசணையின்றி மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. இந்த மாத்திரைகளைப் பயன்படுத்துவதனால் இவர்கள் உடல் மற்றும் உளரீதியாக பாதிப்புக்குள்ளாகின்றனர். இப்பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் மருந்துகள் பற்றி எந்தவொரு புரிதலுமின்றி காணப்படுவதுடன், நிறுவனத்தினூடாக வழங்கப்படும் மருந்துகள் குறித்து இவர்கள் நம்பகத்தன்மையுடன் காணப்படுகின்றனர். வர்த்தக வலயங்களில் பெரும்பாலும் யுவதிகளே தொழிலில் ஈடுபடுகின்றனர். மாதவிடாய் கட்டுப்பாட்டிற்கு வழங்கப்படும் பல்வேறு மருந்துகள் தொடர்பாக வடக்கிலும், தெற்கிலும் உள்ள வர்த்தக வலயங்களில் உள்ள பெண்கள் குறிப்பிட்டனர். இவ்வாறு இத்தொழிலாளப் பெண்களுக்கு மாதவிடாய் சுழற்சி செயற்பாட்டை கட்டுப்படுத்துவதற்கு ஏதுவான மாத்திரைகளை வழங்குவதன் மூலம் நேரடியாக இவர்களது இனப்பெருக்க சுகாதாரத்திற்கு பாதிப்பை விளைவிக்கின்றனர். இவ்வாறு வைத்தியரின் அனுமதி மற்றும் ஆலோசணையின்றி மருந்து மாத்திரைகளை விநியோகிப்பது தொடர்பாக அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகள் மூலம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இல, 221, வெலபட வீதி, கட்டுநாயக்கவை வசிப்பிடமாகக் கொண்ட எச்.ஐ.சமன்மலி ஆகிய என்னால் ரத்வெகி அச்சகத்தில் அச்சிடப்பட்டது.